## நாம் இன்று அமர்ந்திருக்கும்

# இடத்தின் போராட்ட வரலாற்றை அறிந்து கொள்ளுங்கள்!

### அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் நடைபெற்ற ‘அசெட்’ கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரை!

**சென்னை, செப்.6–**

**“நாம் இன்று அமர்ந்திருக்கும் இடத்தின் போராட்ட வரலாற்றை அறிந்து கொள்ளுங்கள்” என்று கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் அண்ணா நூற்றாண்டு நுலக அரங்கத்தில் நடைபெற்ற ‘அசெட்’ அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரியின் ஏழாவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும் போது கூறினார்.**

**அசெட் அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரியின் ஏழாவது பட்டமளிப்பு விழா மற்றும் கல்வி விருது வழங்கும் விழா சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் செப்டம்பர் 4 ஆம் தேதி நடந்தது.**

**இவ்விழாவில் தலைமை விருந்தினராக கழகத் துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்.**

**அப்போது அவர் பேசியதாவது : -**

“இங்கே உரையாற்றிய பலரும் ஆங்கிலத்தில் பேசிவிட்டார்கள். அதனால் நாம் தமிழில் பேசுவோம்” என்றதும் மாணவர்கள் மகிழ்ச்சியில ஆர்ப்பரித்தனர். “தமிழ் எந்த காலத்திலும் உயர்ந்து நிற்கும் என்ற மகிழ்ச்சிகரமான நம்பிக்கையை தரும் நிகழ்ச்சியாக உங்கள் ஆரவாரம் அமைந்திருக்கிறது.

இரட்டிப்பு மகிழ்ச்சி என்னவென்றால் இந்த அண்ணா நூலகத்தை கட்டியவர் தலைவர் கலைஞர். அவர் உருவாக்கிய இந்த அரங்கத்தில் இன்று தமிழில் பேசும்போது இவ்வளவு மகிழ்ச்சி ததும்புவதை பார்த்தால் அவருக்கும் நிறைவாக இருக்கும்.

யார் எதை திணித்தாலும் தமிழ் எந்நாளும் வாழும் என்ற நம்பிக்கையை தருவதாக அமைந்திருக்கிறது.

நாம் இன்று இந்த இடத்தில் அமந்திருக்கிறோம் என்றால் இதற்கு பின்புலமாக இருந்த, இதற்கு முன்னால் நம் சரித்திரம் என்ன என்பதை நாம் ஒவொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இன்று இந்த மேடையில் பட்டதாரிகளாக, துணைவேந்தர்களாக, ஒரு நிறுவனத்தை நடத்தக் கூடியவர்களாக இங்கே அமர்ந்திருக்கிறார்கள் என்றால், ஒரு காலகட்டத்திலே கல்வி மறுக்கப்பட்ட சூழலில் இருந்து இவர்கள் வந்திருக்கிறார்கள்.

**ஒரு காலத்தில் கல்வி மறுக்கப்பட்டது!**

இன்று தமிழ்நாட்டில் ஒரு டிகிரி வாங்குவது என்பது சர்வ சாதாரணமான ஒரு விஷயம். எல்லாருமே கல்லூரியில் படித்து பட்டம் பெறும் வாய்ப்பை பெற்றவர்களாக இருக்கிறோம்.

ஆனால் இதற்காக அன்று எத்தனை பேர் போராடியிருக்கிறார்கள்... ஒரு காலத்தில் கல்வி மறுக்கப்பட்டது. பள்ளிக் கூடம் வழியாக நடந்துகூட போக முடியாத அளவுக்கு ஒரு சூழலெல்லாம் இருந்தது. அதற்கு எதிராக போராடியவர்கள், அடிபட்டவர்கள், ரத்தம் சிந்தியவர்கள், சிறையில் அடைக்கப்பட்டவர்கள் யார் என்பதை நாம் தெரிந்துகொண்டால் தான் இந்த உரிமையை நம்மால் தக்க வைத்துக் கொள்ள முடியும். அடுத்த தலைமுறைக்கு நம்மால் தர முடியும்.

சுயமரியாதை ஒன்றுதான் அடுத்த தலைமுறைக்கு நாம் தந்துவிட்டுச் செல்லும் பரிசாக இருக்க முடியும். நம் உரிமைகளை பாதுகாத்து அதை அடுத்த தலைமுறைக்கு அளித்திட வேண்டும்.

பெரியாராக இருக்கட்டும், அண்ணாவாக இருக்கட்டும், கலைஞராக இருக்கட்டும், இன்றுவரை போராடிவரக் கூடிய நமது தளபதியாக இருக்கட்டும்... இவர்கள் அத்தனை பேரின் வரலாற்றையும் தெரிந்துகொண்டால் தான் இன்று நாம் உட்கார்ந்திருக்கும் இந்த இடத்தின் மதிப்பு என்ன என்று புரியும்.

**படிக்க வேண்டிய பெரியாரின் புத்தகம்!**

அதனால் நாம் யார், நமது அடையாளம் என்ன, நமது வரலாறு என்ன, இந்த இடத்துக்கு வந்திருப்பதற்கு நாம் கொடுத்திருக்கக் கூடிய விலை என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் இவை போராடிப் பெற்ற உரிமைகள்.’

அதுவும் பெண்கள் கல்வி பெற்றது இன்னும் பெரிய போராட்டம். அந்த உண்மைகளை எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டும். பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் படிக்க வேண்டிய பெரியாரின் முக்கிய புத்தகம், ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்பது தான்.



இந்த சமூகம் நம் மேல் திணிக்கக் கூடிய, பண்பாடு, கலாச்சாரம் என்று சொல்லி மக்களை சிந்திக்கவிடாமல் அதற்கு வழிவகுக்காமல் ஒரு நிலையை உருவாக்கி வைத்திருக்கிறோம் என்பதை சொல்லக் கூடிய ஒரு முக்கியமான புத்தகம் அது.

வாழ்க்கையில் இது உங்களுடைய பயணம். அதை வேறு யாரும் வாழ முடியாது. நீங்கள் மட்டும்தான் உங்கள் வாழ்வை வாழ வேண்டும். உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இது சரி, இது தவறு என்று நிறையபேர் நமக்கு சொல்லிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் நமக்கு எது நியாயம் என்று படுகிறதோ எது சரியன்று படுகிறதோ... சாதி, மதம் எல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு அந்த பயணத்தை நீங்கள் கையிலெடுக்க வேண்டும்.

**மதிப்புமிக்க வாழ்க்கை!**

மனிதனாக இந்த சமூகத்துக்கு நம்மால் என்ன செய்ய முடியும்... வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி ஊட்டக் கூடிய விஷயங்களை ஒதுக்கிவிட்டு நாம் இந்த சமூகத்திலே எப்படி வாழ வேண்டும் என்ற சிந்தனையோடு உங்கள் வாழ்க்கையை வகுத்துக் கொள்ள வேண்டும்.

அம்மா, அப்பா இருப்பார்கள், அண்ணன் தம்பி இருப்பார்கள், சகோதரிகள் இருப்பார்கள், நண்பர்கள் இருப்பார்கள்... ஆனால் இறுதிகட்டம் வரை நம்மோடு வரப் போவது நாம் மட்டும்தான் என்பதை உணர்ந்து... உங்கள் மதிப்பு மிக்க வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**சிங்கப்பூர் நேஷனல் லைப்ரரி!**

ஒரு காலத்தில் திரும்பிப் பார்க்கும்போது நீங்கள் பெருமைப்படக் கூடிய வாழ்க்கையை வாழ்ந்திருக்க வேண்டும்.

இந்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தை கட்டியது தலைவர் கலைஞர் என்று சொன்னேன். தலைவர் கலைஞர் அவர்கள் சிங்கப்பூர் நேஷனல் லைப்ரரி போல சென்னையில் கட்ட வேண்டும் என்று முடிவு செய்து இதைக் கட்டினார்.

திருக்குவளை என்ற சாதாரண கிராமத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட, வாய்ப்பு வசதிகள் இல்லாத குடும்பத்தில் பிறந்த கலைஞர் தான்... இத்தனை உலகத் தரம் வாய்ந்த நூலகத்தை கட்டியவர்.

அதனால் நான் இங்கிருந்து வந்தேன், அங்கிருந்து வந்தேன், என்னால் முடியுமா முடியாதா என்ற எந்த மனத் தடையும் இல்லாமல், ‘நான் என்ன விரும்புகிறேனோ அதை என்னால் சாதிக்க முடியும். யாரும் எதுவும் என்னைத் தடுக்க முடியாது’ என்ற நம்பிக்கையோடு நீங்கள் வாழ வேண்டும்.

இன்று உயர் நிலைகளில் இருக்கும் யாருமே எடுத்த உடனே வெற்றியைப் பெற்றுவிடவில்லை. யாருமே எந்த வலிகளும் இல்லாமல் உயர்ந்த இடத்தை அடைந்துவிடவில்லை. சிறு சிறு பின்னடைவுகளை தூக்கி சுமந்துகொண்டே இருக்காமல் அதைத் தூக்கி தூரப் போட்டுவிட்டு, அடுத்த வேலை, அடுத்த விஷயம், அடுத்த சாதனையை நோக்கி ஓடிக் கொண்டே இருந்தோமென்றால் மகிழ்ச்சியும் வெற்றியும் நம்மோடு தொடர்ந்து பயணிக்கும்”.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

இந்நிகழ்வில் அழகப்பா பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் ஜி.ரவி, அசெட் கல்வி நிறுவனங்களின் நிறுவனர் டாக்டர் முகமது ரிஸ்வான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.


